ஆஸ்பிட்டலைக் கண்டு கொள்ளவேயில்லை; மிகுந்த வேதனையாக இருக்கிறது. அம்மா அவர்கள், நமது ஆட்சிக் காலத்தில் 5 டாக்டர்களை அங்கே நியமனம் செய்து, அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை செய்ய ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த இதய தெய்வம் அவர்களின் பொற்பாதம் தொட்டு வேண்டி, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கின்றேன், வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (14-3-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

பின்னர், பேரவை பிற்பகல் 6-24 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

35. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் இருபத்து எட்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்).

36. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்தாறாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

37. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

38. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 323 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).